### கடந்த ஜன.1 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள

# உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை எதிர்த்து வழக்கு

## தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை**

கடந்த ஜன.1 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், தமிழக அரசு பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஏற்கெனவே அமலில் இருந்த புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராகவும், பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் எனக் கோரியும் அரசு ஊழியர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். அதைத்தொடர்ந்து உறுதியளிக்கப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது.

> ஓய்வூதிய திட்டத்துக்காக தங்களது பங்களிப்புத் தொகையை செலுத்தி ஓய்வு பெற்றவர்களுக்கும் தொடர் ஓய்வூதியம் பெற அனைத்து உரிமைகளும் உள்ளது.

இந்நிலையில், கடந்த 2017-ம் ஆண்டு விருப்ப ஓய்வுபெற்ற அரசு உதவிபெறும் ஆங்கிலோ - இந்தியன் பள்ளி ஆசிரியையான திருவான்மியூரைச் சேர்ந்த ரேணுகாதேவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "கடந்த 2005-ம் ஆண்டு பணியில் சேர்ந்து 2017-ல் விருப்ப ஓய்வு பெற்றும், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இன்னும் எனக்குரிய ஓய்வூதியப் பணப் பலன்கள் வழங்கப்படவில்லை. இதற்காக ஓய்வூதிய பணப்பலன்கள் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன்.

இந்நிலையில் தமிழக அரசு பணி ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடையுடன் சேர்த்து, கடைசி மாதம் பெறும் ஊதியத்தில் 50 சதவீதத்தை ஓய்வூதியமாகப் பெறும் வகையில் புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை 2026 ஜன.1-ம் தேதி முதல் அறிமுகம் செய்து, அரசாணையும் பிறப்பித்துள்ளது. மேலும், 2025 டிச.31-ம் தேதிக்கு முன்பாக பணி ஓய்வுபெற்றவர்களுக்கு இத்திட்டம் பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் என்னைப் போன்றோர் தொடர் ஓய்வூதியம் பெற முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பங்களிப்புத் தொகை செலுத்தாத அரசு ஊழியர்கள் தொடர்ச்சியாக மாதாந்திர ஓய்வூதியம் பெற முடியும் என்றால், ஓய்வூதிய திட்டத்துக்காக தங்களது பங்களிப்புத் தொகையை செலுத்தி ஓய்வு பெற்றவர்களுக்கும் தொடர் ஓய்வூதியம் பெற அனைத்து உரிமைகளும் உள்ளது. அரசின் நிதிச்சுமையை குறைப்பதற்காகவே பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் அதற்கு எதிர்மறையாக இப்போது செயல்படக் கூடாது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ரூ.73 ஆயிரம் கோடி எல்ஐசி நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக நிதியமைச்சர் கூறியுள்ள நிலையில், அந்த தொகை வட்டியுடன் சேர்ந்துள்ளதால், 2025 டிச.31-ம் தேதிக்கு முன்பாக ஓய்வுபெற்றவர்களுக்கும் தொடர் ஓய்வூதியம் வழங்குவதில் எந்த சிக்கலும் இருக்காது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்துக்கு இதுநாள் வரை எந்தவொரு விதிகளும் வகுக்கப்படவில்லை என்பதால், எனக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அகவிலைப்படியுடன் சேர்த்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்க உத்தரவிட வேண்டும். அத்துடன் புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் சட்டவிரோதமானது என அறிவிக்க வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷா, இது தொடர்பாக தமிழக அரசு மார்ச் 26-க்குள் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளி வைத்துள்ளார்.



**சென்னை அசோக் நகரில் தோப்பாசாமி எனும் மல்லிகேஸ்வரர் கோயில் உள்ளது. சுமார் 700 ஆண்டு பழமையான இக்கோயில் பல்லவர் காலத்தில் கட்டப்பட்டது. 1780-1830 காலகட்டத்தில் வாழ்ந்த தோப்பாசாமி என்ற சித்தர் இக்கோயிலில் வழிபட்டதால் இப்பெயர் வந்தது.**

# பருவநிலை மாற்றத்தால் பரவும் 'மெட்ராஸ் ஐ'

**சென்னை**

பருவநிலை மாற்றத்தால் பரவி வரும் 'மெட்ராஸ் ஐ' தொற்றால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குளிர்காலம் முடிந்து வெயில் சுட்டெரித்து வரும் பருவநிலை மாற்றத்தால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அதிகளவில் 'மெட்ராஸ் ஐ' எனப்படும் கண் நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை உட்பட தனியார் மருத்துவமனைகளுக்கு மெட்ராஸ் ஐ பாதிப்புடன் சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இது தொடர்பாக, அரசு கண் மருத்துவர்கள் கூறியதாவது:

கண் விழியையும், இமையையும் இணைக்கும் ஜவ்வுப் படலத்தில் ஏற்படும் வைரஸ் தொற்று தான் 'மெட்ராஸ் ஐ' ஆகும். அந்த வகையான பாதிப்புகள் காற்று மூலமாகவும், மாக வாயிலாகவும் பரவக்கூடும்.

மெட்ராஸ் ஐ பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திய பொருள்களை உபயோகித்தாலும் மற்றவர்களுக்கு அந்நோய்த் தொற்று பரவும். கண் எரிச்சல், விழிப்பகுதி சிவந்து காணப்படுதல், நீர் சுரந்து கொண்டே இருத்தல், இமைப் பகுதி ஒட்டிக் கொள்ளுதல் ஆகியவை மெட்ராஸ் ஐ, பாதிப்பின் அறிகுறிகள் ஆகும். சமீப காலமாக இதுபோன்ற அறிகுறியுடன், மருத்துவமனைக்கு வருவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

மெட்ராஸ் ஐ எளிதில் குணப்படுத்தக்கூடியது. ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற வேண்டும். மெட்ராஸ் ஐ வந்தால் தனி அறையில் இருக்க வேண்டும். தனியாக டவல், சோப்பு ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். கண் வலி தான் என்று மருத்துவர் ஆலோசனை இல்லாமல் மருந்துகளை வாங்கி பயன்படுத்தக் கூடாது. சில நேரங்களில் கருவிழி பாதிப்பு கூட ஏற்படலாம். பொதுவாக ஒரு கண்ணில் மெட்ராஸ் ஐ பிரச்சினை ஏற்பட்டால், மற்றொரு கண்ணிலும் அந்த பாதிப்பு வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

எனவே மெட்ராஸ் ஐ பாதிப்பு ஏற்பட்டவர்கள், மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். அவர்கள் தாங்கள் பயன்படுத்திய பழைய காண்டாக்ட் லென்ஸ்களை அகற்றிவிட்டு மருத்துவரிடம் கலந்தாலோசித்த பிறகு புதிய காண்டாக்ட் லென்ஸ்களை அணிய வேண்டும். தங்களது தனிப்பட்ட பயன்பாட்டு பொருள்களை பிறர் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

---

### மரபுவழி, நவீன பாணி ஓவியம், சிற்பக்கலைகளில்

# சிறந்த கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருது

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

**சென்னை**

மரபுவழி, நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக்கலைகளில் சிறந்த கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருதுகளை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பில் ஒவ்வோர் ஆண்டும் மரபுவழி, நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமையான கலைஞர்களுக்கு 'கலைச் செம்மல்' விருது வழங்கி கவுரவிக்கப்படுகிறது.

இந்த விருது ரூ.1 லட்சம் பரிசு, செப்புப் பட்டயம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை உள்ளடக்கியது. ஆண்டுதோறும் 6 புகழ்பெற்ற கலைஞர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் 2025-26-ம் ஆண்டுக்கான கலைச்செம்மல் விருதுக்கு மரபுவழி ஓவியப் பிரிவில் மா.பாலசுப்ரமணியன், மரபுவழி சிற்பப் பிரிவில் தே.ஸ்ரீகண்ட ஸ்தபதி மற்றும் தஉ.பத்மநாபன், நவீன பாணி ஓவியப் பிரிவில் கோ.வில்வநாதன் மற்றும் மு.ராஜா, நவீன பாணி, சிற்பப் பிரிவில் ச.சாந்தி ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டனர். அவர்களுக்கு தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கலைச் செம்மல் விருதுகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை செயலர் டாக்டர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் எஸ். வளர்மதி, இணை இயக்குநர் ஜெ.கார்குழலி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

உள்நாட்டு நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளதால், 2026ஆம் ஆண்டில் நிலக்கரி இறக்குமதியில் 30 சதவீதத்தைக் குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

**30%**

# உணவு விநியோகப் பணி: பெண் ஊழியர்களின் வேதனை தீருமா?

ஊதியப் பாகுபாடு முதல் சட்டப் பாதுகாப்பின்மைவரை பெண் ஊழியர்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்



**அ.இருதயராஜ்**
உதவிப் பேராசிரியர்
தொடர்புக்கு: iruraj2020@gmail.com

இன்றைய காலக்கட்டத்தில் உணவு விநியோகப் பணி, வாடகை வாகன ஓட்டுநர் பணிகளில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் ஈடுபடுகிறார்கள். இப்பணியில் ஆண்களைவிடவும் கூடுதலான பிரச்சினைகளைப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். இப்படி சவால்களும் பாதுகாப்பற்ற நிலையும் இருக்கின்ற இந்த வேலையைப் பெண்கள் தேர்ந்தெடுப்பதற்கான காரணம் என்ன? அவர்கள் சந்திக்கும் சவால்களும் பிரச்சினைகளும் என்ன? அவர்களை இந்தச் சமூகம் நடத்தும் விதம் எப்படி இருக்கிறது?

**பொருளாதார நெருக்கடி**

சென்னை, பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, டெல்லி போன்ற பெருநகரங்களில் வாழ்கின்ற நடுத்தரவர்க்கத்துக் குடும்பங்களில் பெரும்பாலானோர் வாடகை வீட்டில்தான் வாழ்கிறார்கள். மேலும், நகர வாழ்க்கைக்கே உரிய செலவுகளைச் சமாளிக்க முடியாமலும் திணறுகிறார்கள். எனவே, பெண்களும் வேலைக்குச் சென்றால்தான் செலவுகளைச் சமாளிக்க முடியும் என்கிற நிர்பந்தம். படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பெண்கள், கிடைக்கும் நேரத்தில் உணவு விநியோகம் போன்ற வேலைக்குச் செல்கிறார்கள். இந்த வேலையைத் தேர்ந்தெடுப்பதற்கு இன்னொரு முக்கியமான காரணம், இதில் உள்ள நெகிழ்வுத்தன்மை. குறிப்பிட்ட நேரத்தில் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும்; இன்னொருவரின் கீழ் வேலை செய்ய வேண்டும் என்கிற கட்டுப்பாடு இல்லை.

கல்லூரியில் படிக்கின்ற பெண்கள், கல்லூரி நேரம் முடிந்தவுடன் பகுதி நேரமாக இந்த வேலையில் ஈடுபடுகின்றனர். இதில் கிடைக்கும் ஊதியத்தின் மூலம் கல்லூரிக்குக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்த முடிகிறது. இதோடு விடுதிக் கட்டணம், குறிப்பேடுகள் வாங்குவது, தனிப்பட்ட செலவுகள் ஆகியவற்றை நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

**தடைகளும் சவால்களும்**

இருசக்கர வாகனமும் ஓட்டுநர் உரிமமும் இல்லாத பெண்கள் இந்தப் பணியில் சேர முடியாமல் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இருசக்கர வாகனத்தைத் தங்களது பெயரிலே பதிவுசெய்வதற்கான வாய்ப்பும் வசதியும் குறைவாக உள்ள பெண்கள் இந்தத் தொழிலைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாது. பெரும்பாலும் இருசக்கர வாகனங்கள் ஆண்களின் பெயரிலேயே பதிவுசெய்யப்படுகின்றன. அப்படியான பெண்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கான பயிற்சி வழங்கவும், உரிமம் பெற்றுத் தரவும் சில நிறுவனங்கள் முன்வந்தன. சைக்கிளை வைத்துக்கொண்டு உணவு விநியோகம் செய்வதற்கான சூழலையும் உருவாக்கிக் கொடுத்தன. ஆனால், நீண்ட நேரம் சைக்கிளை மிதித்து உணவு விநியோகிக்கும் பணியைச் செய்வது பெண்களுக்கு உடல் களைப்பை ஏற்படுத்தியது.

ஸ்விக்கி நிறுவனம் பெண்களுக்கு என்று பிரத்யேகமாக மின்சார சைக்கிள்களை அறிமுகப்படுத்தி, அதை அவர்கள் வாடகைக்கு எடுத்து உணவு விநியோக வேலையில் ஈடுபடலாம் என்கிற திட்டத்தைக் கொண்டுவந்தது. ஆனால், அதைத் தொடர்ந்து செயல்படுத்த முடியவில்லை.

பெண்கள் எதிர்கொள்கின்ற மாதவிடாய்ப் பிரச்சினை இன்னொரு சிக்கல். அந்த நேரத்தில் பெண்கள் உடல் சோர்வு, மனச்சோர்வு போன்றவற்றுக்கு ஆளாகின்றனர். அடிக்கடி சானிட்டரி பேட் மாற்ற வேண்டிய சூழல். இவையெல்லாம் இவர்கள் செய்கின்ற வேலைக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகின்றன. சில நிறுவனங்கள் பெண்களுக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறையை அளிக்க முன்வந்தன. பெண்கள் எந்த முன்னறிவிப்பும் இன்றி இரண்டு நாள் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம். தொடர்ந்து பணி செய்கின்ற பெண்களுக்கு மட்டும் இந்த நாள்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படும் என்று அறிவித்தன. இது அவர்களுக்கு ஓர் ஊக்கத்தொகையாக அமைந்தது.

**தொடரும் பிரச்சினைகள்**

பெண்கள் இருசக்கர வாகனத்திலேயே அலைந்துகொண்டிருப்பதால், இயற்கை உபாதைகளைக் கழிப்பது பெரும் சிரமம். பொதுக் கழிப்பிடங்களுக்குச் சென்றாலும், அவற்றில் பெரும்பாலானவை சுத்தமாக இருப்பதில்லை. இதனால் தொற்றுநோய் அபாயமும் இருக்கிறது. எனவே, அவர்கள் சுத்தமான கழிப்பறைகளைப் பயன்படுத்துகின்ற வகையிலே உணவு விடுதிகளிலும் பெட்ரோல் நிலையங்களிலும் கழிப்பறையைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்துவருகின்றனர்.

எல்லாவற்றையும் தாண்டி, விபத்துகளில் சிக்கும் அபாயம். பெண்கள் சாலைவிதிகளைப் பின்பற்றுவதில் பெரும்பாலும் கவனம் செலுத்தினாலும், விதிமுறைகளைப் பின்பற்றாமல் வாகனம் ஓட்டுபவர்களால் ஏற்படும் விபத்துகளால் பெண்களும் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் பாலியல் சீண்டல்கள், துன்புறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய அபாயமும் உண்டு. பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் (POSH) சட்டம், 2013இன்கீழ் இவர்களுக்குச் சட்டபூர்வப் பாதுகாப்பும் கிடைப்பதில்லை. சுயாதீன ஒப்பந்தத்தில் பணிபுரிபவர்கள் என்பதால், இந்தப் பாதுகாப்பு அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

இந்தத் தொழிலில் பெண்களைப் பாலின வேறுபாட்டுடனும் பாகுபாட்டுடனும் நடத்துவது மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. குறிப்பாக, ஆண்களைவிடப் பெண்களுக்கு 10% குறைவான ஊதியம்தான் வழங்கப்படுகிறது. உணவு விநியோகம் செய்யும் பணியில் இருக்கும் பெண்களில் பலர், உணவக உரிமையாளர்களால் பாரபட்சமாக நடத்தப்படும் சூழலும் இருக்கிறது. பல பெண்கள் இத்தகைய சூழலில் மனமுடைந்துபோவது தொடர்கிறது.

இப்படிக் குறைவான சம்பளத்திலும், பாதுகாப்பற்ற சூழலிலும் பல்வேறு சவால்கள், பிரச்சினைகளுக்கு மத்தியிலும் பணி செய்கின்ற பெண்களை இந்தச் சமூகம் இனி எப்படிப் பார்க்க விரும்புகிறது? இதற்கு என்ன தீர்வை ஆட்சியாளர்கள் வழங்கப்போகிறார்கள்?

இந்தியாவின் உயரமான நடுகல் அமைந்த திருப்பூர் குமரிக்கல்பாளையத்தில்

# அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடக்கம்

**திருப்பூர்**

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி வட்டம் குமரிக்கல்பாளையம் கிராமத்தில், இந்தியாவிலேயே மிக உயரமான 27 அடி உயர நடுகல் அருகே, அகழ்வாய்வுப் பணிகளை இந்திய தொல்லியல் துறை தொடங்கியது.

2 ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான நாட்டிலேயே மிக உயரமான நடுகல், திருப்பூர் மாவட்டம் குமரிக்கல்பாளையத்தில் இருப்பதால், அந்த பகுதியை அகழாய்வு செய்ய வேண்டும் என வலியுறுத்தி, வரலாற்று ஆய்வாளர்களும், கிராம மக்களும் கடந்த 2023 முதல் 2025 வரை 736 நாள் தொடர் காத்திருப்பு போராட்டத்தை நடத்தினர். மேலும், அகழாய்வுப் பணிகளை தொடங்க வலியுறுத்தி கடந்த ஆண்டு மே மாதத்தில் 7 நாள் தொடர் காத்திருப்புப் போராட்டமும் நடந்தது. இதன்பின், அத்திக்கடவு - அவிநாசி திட்ட போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணி உள்ளிட்டோர், குமரிக்கல்பாளையத்தில் அகழாய்வு செய்ய வலியுறுத்தி மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத்திடம் கடந்த ஜன. 17-ல் மனு அளித்தனர்.






குமரிக்கல்பாளையத்தில் அகழ்வாராய்ச்சி பணிகளை தொடங்கிய மத்திய தொல்லியல் துறையினர். (அடுத்தபடம்) குமரிக்கல்பாளையத்தில் அமைந்துள்ள உயரமான நடுகல்.

இதற்கிடையே, 27 அடி உயர நடுகல் அருகே இரும்பு, முதுமக்கள் தாழி, பானைகள், பானை ஓடுகள், எலும்புத்துண்டுகள் என தொல்லியல் எச்சங்கள் நிறைந்த இந்தப் பகுதியை ஆய்வு செய்ய வேண்டும் என குமரிக்கல் தொல்லியல் பாதுகாப்பு சங்கமும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

இந்த நிலையில், அகழ்வாராய்ச்சிப் பணிகளை மத்திய தொல்லியல் துறை தொடங்கி உள்ளது. மத்திய தொல்லியல் துறையின் திருச்சி மண்டல கண்காணிப்பாளர் (பொ) அரவாழி தலைமையில் 20-க்கும் மேற்பட்ட தொல்லியல் துறையினர் தற்போது ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். நடுகல்லில் இருந்து 100 - 150 மீட்டர் தொலைவுக்கு அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில், கிடைத்த ரோமானிய வர்த்தகத்துக்கான ஆதாரங்கள், மட்பாண்டத் துண்டுகள், இரும்பு கசடுகள், பிற தடயங்களை, இந்திய தொல்லியல் துறை பகுப்பாய்வு செய்ய திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அரவாழி கூறும்போது, "ஈரோடு மாவட்டத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த கொடுமணலில் இருந்து வெறும் 15- 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த அகழ்வாராய்ச்சிக்கான இடம், ரோமானிய வர்த்தகத்துக்கான வலுவான சான்றுகளை வெளிப்படுத்தும். தொன்மையான நடுகல் அருகே ஆய்வுப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் மூலம் பெருங்கற்காலம், வரலாற்று காலத்துக்கான ஆதாரங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அகழாய்வுகளின் முடிவில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்க, தொல்லியல் துறை காத்திருக்கிறது" என்றார்.

இதன்தொடர்ச்சியாக குமரிக்கல்பாளையத்தில் ஆய்வுப் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது.